### வடநாட்டில் ஒரு மொழித்திட்டம் - தமிழ்நாட்டில் மட்டும் மும்மொழித் திட்டமா? தொகுதிச் சீரமைப்பு -

# இந்தித் திணிப்புச் சோதனையில் முதலமைச்சர் நிச்சயம் வெல்வார்!

## சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னின்று நடத்திய கழகத் தலைவர் பிறந்தநாள் பொதுக்கூட்டத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப. சிதம்பரம் உறுதி!

**சென்னை, மார்ச் 5-**

**சென்னை, கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு, கொளத்தூர் தொகுதியில் முன்னின்று நடத்திய, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில், ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.**

**அவர் தமது உரையில், "வடநாட்டில் ஒரு மொழித் திட்டம் - தமிழ் நாட்டில் மட்டும் மும்மொழித் திட்டமா?" எனக் கேள்வி எழுப்பினார்.**

**மேலும் அவர், "தொகுதிச் சீரமைப்பு - இந்தித் திணிப்புச் சோதனையில் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நிச்சயம் வெல்வார்!" என்றும் குறிப்பிட்டார்.**

**இம்மாபெரும் பொதுக் கூட்டத்தில் ப. சிதம்பரம் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

கடந்த 10 நாட்களாக முதலமைச்சர் அவர்களுடைய பேச்சு எழுத்து கடிதங்கள் - வீடியோக்களை எல்லாம் நான் பார்த்து வருகிறேன். 2021ல் ஆட்சிக்கு வந்தபோது இருந்த சூழ்நிலை 2026இல் அதே சூழ்நிலை இருக்க வேண்டும் என்று நாம் விரும்பும் அதே நேரத்தில், நம்முடைய பகைவர்கள் 2026இல் அந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்காக முயற்சி செய்கிறார்கள் என்பதைத்தான் இந்த 10 நாட்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன.

நாம் இருக்கிறோம்; நம்முடைய கட்சித் தோழர்கள் இருக்கிறார்கள்; மக்கள் இருக்கிறார்கள்; மக்கள் கையில் வாக்குச் சீட்டு இருக்கிறது; தேர்தல் கமிஷன் என்று இருந்தாலும், அதையும் மீறி நமக்கு வெற்றி கிடைக்கும் என்று நாம் நம்பி இருக்கிறோம். அந்த நம்பிக்கை நிச்சயமாக வெற்றிபெறும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ஆனால், மற்றவர்கள் மற்ற அணியைச் சார்ந்தவர்கள், மக்களை நம்பி நாம் தேர்தலில் வெற்றி பெற முடியாது. எனவே, இங்கே முடிந்துவிட்ட ஒரு போரை மீண்டும் தொடங்குகிறார்கள். இந்தப் போர் 1930களில் தொடங்கியது. 1965இல் இந்தப் போர் உச்சக்கட்டத்தை அடைந்தது. அந்தப் போர் நிகமும் என்று உணர்ந்ததாலோ என்னவோ... 1963ஆம் ஆண்டில் இருந்த அன்றையப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள், "15 ஆண்டுகளில் அரசியல் சாசனத்தின்படி இந்திதான் ஆட்சி மொழியாக இருக்கும் என்று சரத்து இருந்தாலும், இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் தொடரும் என்று நான் உறுதி கூறுகிறேன்" என்று சொன்னார். எவ்வளவு தீர்க்க தரிசனமான வார்த்தைகள் என்று பார்க்க வேண்டும். இந்தி ஆட்சி மொழி என்று அரசியல் சாசனம் சொல்கிறது. ஆனால் இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் கூடுதல் ஆட்சி மொழியாக இருக்கும் என்று நான் உறுதி கூறுகிறேன் என்று சொன்னார். அதையும் மீறி 1965இல் மொழிப்போர் வெடித்தது. மொழிப்போர் காலத்தில், நான் பல்கலைக் கழகத்தில் மாணவன். இந்திய பல்கலைக் கழகத்தில் மாணவனாக இருந்தால், என்னுடைய வாழ்க்கைப் பாதை எப்படி அமைந்திருக்கும் என்று சொல்ல முடியாது; வெளிநாட்டு பல்கலைக் கழகத்தில் மாணவனாக இருந்தேன்.

**60 ஆண்டுகள் கழித்து இப்போது பிரச்சினையை எழுப்புவது ஏன்?**

இன்று, ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தப் பிரச்சினையை ஏன் எழுப்புகிறார்கள். யோசிக்க வேண்டும். 1965இல் முடிந்த பிரச்சினை; முடிந்ததாக நாம் நினைத்துக் கொண்டிருக்கும் பிரச்சினை; முடிய வேண்டும் என்பதற்காக பலர் சிறை சென்றார்கள்; பலர் உயிரிழந்தார்கள்; பலர் கல்வி தடைப்பட்டது; மிகப்பெரிய பிரளயம் தமிழ்நாட்டில் ஏற்பட்டது. 60 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தப் பிரச்சினையை ஏன் கிளப்புகிறார்கள். இப்போது, நாங்கள் எல்லாம் நாடாளுமன்றத்தில் இருக்கிறோம். இந்தி பேசுபவர்களைப் பார்த்து இந்தி பேசாதீர்கள் என்று சொல்வதில்லையே... இந்தி பேசினால் பேசிவிட்டு செல்லட்டும். கேட்க விரும்புபவர்கள் நாடாளு மன்றத்தில் மொழிபெயர்ப்பில் கேட்கலாம். கேட்க விரும்பாதவர்கள் மௌன படம் போன்று பார்க்கலாம்.

யாரையும் இந்தி பேச வேண்டாம் என்று நாம் சொல்லவில்லை; யாரையும் இந்தி படிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை; யாரையும் இந்தியில் எழுத வேண்டாம் என்று சொல்லவில்லை; வட மாநிலங்களில் பல மாநிலங்களில் இந்திதான் ஆட்சி மொழி, அது வேண்டாம் என்று சொல்லவில்லை. நாம் என்ன சொல்கிறோம் என்றால், இந்தியை எங்கள்மீது திணிக்காதீர்கள். இரண்டு, மூன்று நிகழ்வுகள் இந்த 60 ஆண்டுகளில் நடந்துவிட்டது. அது சரித்திர நிகழ்வுகள். சரித்திரத்தை யாரும் மாற்ற முடியாது. இப்படித்தான் உலகம் வளரும் மாறும் விரியும் என்றால், அதை யாரும் தடுக்க முடியாது; மறைக்க முடியாது.

ஒன்று, ஜவகர்லால் நேருவின் உறுதிமொழியை நம்பி 1965இல் மொழிப்போராட்டம் நடந்த போது, அன்றையப் பிரதமர் வரவில்லை; ஆனால், அன்றைய அமைச்சர் இந்திரா காந்தி சென்னைக்கு வந்து, "என் தந்தை கொடுத்த வாக்குறுதியை நானும் தருகிறேன்" என்று சொன்னார். அந்த வாக்குறுதி தொடர்ந்து அடுத்தடுத்து வந்த அரசுகளால் ஏறத்தாழ காப்பாற்றப்பட்டது. பல அரசுகள் வந்தன. நரசிம்மராவ் அரசு வாஜ்பாய் அரசு - வி.பி.சிங் அரசு சந்திரசேகர் அரசு தேவகவுடா அரசு குஜ்ரால் அரசு இவர்களெல்லாம் அந்தப் பிரச்சினையை கிளப்பவில்லை. கிளப்பியதாக எனக்கு நினைவில்லை; உங்களுக்கு நினைவிருந்தால் சொல்லுங்கள்.

**தேர்தலுக்காக பிரச்சினையை கிளப்புகிறார்கள்!**

நரேந்திர மோடி அவர்கள் ஆட்சிக்கு வந்து 11 ஆண்டுகள் ஆகிவிட்டன. 10 ஆண்டுகளாக கிளப்பாத பிரச்சினையை, 11வது ஆண்டில் ஏன் கிளப்புகிறார்கள்? இதையெல்லாம் ஆழமாக யோசிக்க வேண்டும். இந்த ஆண்டு கிளப்புவதற்கு ஒரே காரணம், தமிழ்நாட்டில் அடுத்த ஆண்டு தேர்தல் வருகிறது. தமிழ்நாடு மிகப் பெரிய அரணாக தடையாக அவர்களுக்கு இருக்கிறது.

வடநாட்டில் இமாச்சல் பிரதேசத்தை தவிர, மேற்கு வங்காளத்தை தவிர, அனைத்து மாநிலங்களும் ஏறத்தாழ பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சி அல்லது அவர்களுடைய தோழமைக் கட்சிகளின் ஆட்சி. தென்னாட்டிற்குள் நுழைய முடியவில்லை; எத்தனை போர் படைகள் கொண்டு வந்தாலும் தென்னாட்டிற்குள் நுழைய முடியாது என்று அவர்களுக்கு தெரியும். கேரளாவில் நுழைய முடியவில்லை; எங்களுக்கும் இடதுசாரி அணிக்கும் கேரளத்தில் வேறுபாடுகள் இருந்தாலும், பாரதிய ஜனதா கட்சி நுழையக் கூடாது என்பதில் நாங்கள் ஒன்றாக இருக்கிறோம். ஆந்திராவில் நுழைய முடியவில்லை. கர்நாடகாவில் நுழைந்தார்கள்; ஆனால், அந்த மக்கள் அவர்களை தூக்கி எறிந்து விட்டார்கள். தமிழ்நாட்டில் நுழைய முடியவில்லை; நுழையவே முடியாது என்று அவர்களுக்கு தெரியும். எனவேதான் இந்தப் பழைய ஆயுதத்தை துருப்பிடித்த ஆயுதத்தை எடுத்து தீட்டி இந்தப் போருக்கு வருகிறார்கள்.

அதனால் இரண்டு, மூன்று வரலாற்று நிகழ்வுகள் நடந்துவிட்டன. 1991ஆம் ஆண்டு உலகமயமாக்குதல் என்ற கொள்கையை இந்தியா ஏற்றுக் கொண்டது; உலகத்தோடு இசைந்துதான் வாழ வேண்டும்; உலகப் பொருளாதாரத்தோடு இசைந்துதான் இந்திய பொருளாதாரம் நடக்க வேண்டும்; உலகத்தோடு வர்த்தகம் செய்ய வேண்டும்; உலக முதலீடு இந்தியாவிற்கு வர வேண்டும்; இந்திய முதலீடு வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டும்; ஏற்றுமதி, இறக்குமதி எல்லாம் பெருக வேண்டும் என்ற கொள்கையை 1991இல் ஏற்றுக் கொண்டு தொடர்ந்து வந்த அரசுகள், நரேந்திர மோடி அரசு உட்பட அதை மாற்ற முடியவில்லை.

உலகமயமாக்குதல் தழுவிய இந்தியா ஆங்கிலத்தையும் தழுவியது. உலகமயமாக்குதலை ஆங்கிலத்தில் தவிர்த்து பார்க்க முடியாதே. உலகமயமாக்குதல் உலகத்தோடு இசைந்துதான் இந்தியப் பொருளாதார இயங்க வேண்டும் என்று ஏற்றுக் கொண்ட அதே நேரத்தில், ஆங்கிலத்தையும் ஏற்றுக் கொண்டோம். ஆங்கிலம் வலுவடைந்திருக்கிறது. இந்தி நுழைந்ததால் ஆங்கிலம் பலவீனம் அடையவில்லை. வர்த்தகத்தில் அந்நிய நாட்டு உறவுகளில் - ஏற்றுமதியில், இறக்குமதில் அந்நிய நாட்டு சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வருவதில் இந்தியர்கள் வெளிநாட்டுக்குச் செல்வதில் ஆங்கிலம் அதிகரித்திருக்கிறது.

**மக்கள் ஆங்கிலத்தின் தேவையை உணர்கிறார்கள்!**

இரண்டாவது, அரசு உணர்வதைவிட பெற்றோர்கள் உணர்ந்திருக்கிறார்கள். இன்று பெற்றோர்கள் ஆங்கிலப் பயிற்சிப் பள்ளிகளை கேட்கிறார்கள். இங்கிலீஷ் மீடியம் பள்ளிக் கூடம் வேண்டும். ஆந்திராவிலோ, தெலுங்கானாவிலோ 60 பள்ளிகளை அரசு இந்த ஆண்டு அனுமதித்திருக்கிறது. 53 பள்ளிகள் ஆங்கிலப் பயிற்சி இங்கிலீஷ் மீடியம் பள்ளிகள். எனவே, மக்கள் ஆங்கிலத்தின் தேவையை உணர்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில் இந்தியை கற்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். இந்தியை கற்கா விட்டால் கற்பிக்காவிட்டால் நாங்கள் பணம் தர மாட்டோம். இந்தத் திட்டம் அந்தத் திட்டத்தின்கீழ் தரமாட்டோம். இந்தச் சூழ்நிலையில்தான் இந்தியாவின் உண்மை நிலவரம் என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டும். இதைத்தான் முதலமைச்சர் அவர்கள் அறிக்கை கடிதம் உரை மூலமாக நாள்தோறும் விளக்கி வருகிறார். அவரை நான் பாராட்டுகிறேன். அது மக்களுக்கு எளிய முறையில் செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் நான் மேடையில் நிற்கிறேன்.

மும்மொழிக் கொள்கை என்பது ராதாகிருஷ்ணன் கமிட்டியால் பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால், இன்று சொல்கிறேன், ஊடகங்கள் இதை எழுத வேண்டும். ராதாகிருஷ்ணன் கமிட்டி பரிந்துரைக்கு பிறகு, இந்திய வரலாற்றிலேயே எந்த மாநிலமும் மும்மொழிக் கொள்கையை அமல் செய்ததே கிடையாது. தமிழ்நாட்டில் மட்டும் வற்புறுத்துகிறார்கள். வற்புறுத்துபவர்களின் முகலட்சணத்தை நான் சொல்கிறேன்.



மும்மொழிக் கொள்கை என்றால் என்ன? தேசிய கல்விக் கொள்கை என்று 2020இல் மோடி அரசு அறிவித்தது. அந்தக் கொள்கை என்ன சொல்கிறது? முதல் மொழி தாய் மொழி; இரண்டாவது மொழி ஆங்கிலம்; மூன்றாவது மொழியாக ஏதாவது ஒரு மொழியை கற்றுக் கொடுங்கள். கற்றுக் கொள்ளட்டும் என்று சொல்கிறது. நான் கேட்கிறேன்; அமித்ஷா அவர்களைக் கேட்கிறேன்; தர்மேந்திர பிரதான அவர்களைக் கேட்கிறேன், இந்தியாவில் எந்த மாநிலத்தில் தாய் மொழி - இந்தி, இரண்டாவது மொழி ஆங்கிலம் என்று வைத்துக் கொள்ளுங்கள், மூன்றாவது மொழியாக எந்த மொழியை, எந்த மாநிலம் கற்பிக்கிறது. இந்தியாவில் எந்த மாநிலமும் கற்பிக்கவில்லை. தமிழ்நாட்டில் 52 கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் இருக்கிறது. சிவகங்கையில் ஒன்று, காரைக்குடியில் ஒன்று இருக்கிறது. சிவகங்கையில் பத்தாவது படித்து, பன்னிரெண்டாவது படித்த மாணவனின் மதிப்பெண் பட்டியலை நான் வைத்திருக்கிறேன்.

**மத்திய அரசு பள்ளிகளிலேயே மும்மொழித் திட்டம் கிடையாது!**

அந்த கேந்திரிய வித்யாலயாவில் பயிற்சி மொழி ஆங்கிலம். இரண்டாவது மொழி இந்தி அல்லது சமஸ்கிருதம். மூன்றாவது மொழியே கிடையாது. நான் சிவகங்கையில் கேட்டேன்; காரைக்குடியில் கேட்டேன்; தமிழ் ஆசிரியர் இருக்கிறாரா? தமிழ் ஆசிரியரே கிடையாது. தமிழ் ஆசிரியர்களையே இவர்கள் நியமிக்கவில்லை. பிறகு, மும்மொழித் திட்டம் எங்கே? மத்திய அரசு பள்ளிகளிலேயே மும்மொழித் திட்டம் கிடையாது. ஆங்கிலம், இந்தி அல்லது சமஸ்கிருதம்.

**வடமாநிலங்களில் ஒரு மொழிக்கொள்கை!**

வட மாநிலங்களில் அதைவிட மோசம். ஏழு, எட்டு மாநிலங்களில் ஹரியானா, ஹிமாச்சல் பிரதேஷ், உத்தரகாண்ட், உத்தரப் பிரதேசம், பீகார், சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம், ஜார்க்கண்ட் இதில் ஒரு மொழிதான். ஒரு மொழிக் கொள்கைதான். பேச்சு மொழி இந்தி, ஆட்சி மொழி இந்தி, பயிற்சி மொழி இந்தி, பாட மொழி இந்தி. ஆங்கிலமே கற்றுக் கொடுக்கவில்லை. இரண்டாவது மொழியே கற்றுக் கொடுக்கவில்லை. மூன்றாவது மொழி தென்னாட்டு மொழி கற்பனைகூட செய்து பார்க்க முடியாது. பீகாரில், உத்தரப் பிரதேசத்தில் தெலுங்கு ஆசிரியரோ தமிழ் ஆசிரியரோ மலையாள ஆசிரியரோ ஒருவரைகூட நியமிக்கவில்லை. ஆங்கில ஆசிரியர்களே கிடையாது. வடநாட்டில் ஒரு மொழித் திட்டம். தமிழ்நாட்டில் மட்டும் மும்மொழித் திட்டமா? என நான் மத்திய அரசை பகிரங்கமாக குற்றச்சாட்டுகிறேன்.

நான் பல மாநிலங்களில் சுற்றுப்பயணம் செய்திருக்கிறேன். அமைச்சராகவும் சென்றிருக்கிறேன்; அமைச்சர் இல்லாத நேரங்களிலும் சென்றிருக்கிறேன். அந்தப் பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகளுக்கு ஆங்கிலமே பேச முடியாது; பேசத் தெரியாது. கற்றுக் கொடுத்தால்தானே பேசுவார்கள். நகர்ப்புறங்களில் இருக்கும் தனியார் பள்ளிகளில் ஓரளவு ஆங்கிலம் பேசுவார்கள்; நகர்ப்புறத்தை ஒட்டியிருக்கும் தனியார் பள்ளிகளில் ஓரளவு ஆங்கிலம் பேசுகிறார்கள்; ஊரகப் பகுதிகளுக்கு கிராம பகுதிகளுக்கு சென்றால், ஒரு பிள்ளைகூட ஆங்கிலம் பேச முடியாது; எழுத முடியாது. நீங்கள் இரண்டு மொழிக் கொள்கையை இரண்டு மொழிகளை கற்பிக்கவில்லை; ஒரு மொழியை கற்பிக்கிறீர்கள். தமிழ்நாட்டிற்கு மட்டும் மும்மொழித் திட்டம் என்று எந்த முகத்தோடு வந்து எங்களிடம் பேசுகிறீர்கள்.

**பீகார் நிலைமை மோசம்!**

பீகார் நிலைமை இன்னும் மோசம். ஏறத்தாழ 2 லட்சம் பள்ளிகள் இருக்கின்றன. இரண்டு லட்சம் பள்ளிகளுக்கான ஆசிரியர்களில், 56 சதவிகிதம் காலியிடங்கள்; ஆசிரியர்களே நியமிக்கவில்லை. 100 ஆசிரியர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 44 ஆசிரியர்கள்தான் இருக்கிறார்கள். கணிதப் பாடம், வரலாற்றுப் பாடம், பூகோளப் பாடம், விஞ்ஞானப் பாடம் இதற்கெல்லாம் ஆசிரியர்களே கிடையாது. தமிழுக்கா ஆசிரியர்களை நியமிக்கப் போகிறார்கள்? தெலுங்கிற்கா ஆசிரியர்களை நியமிக்க போகிறார்கள்? யாரை ஏமாற்றுகிறார்கள் என்று கேட்கிறேன்.

மத்திய அரசு மத்திய அரசின் கல்வி அமைச்சர் சொல்லட்டும். எத்தனை பள்ளிகளில் எத்தனை அரசு பள்ளிகளில் வட நாட்டில் ஆங்கில ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லட்டும். இரண்டாவது மொழி ஆங்கிலம். ஆங்கில ஆசிரியர்களே கிடையாது. மூன்றாவது மொழிக்கா செல்கிறீர்கள் நீங்கள். இரண்டாவது படியிலேயே தடுமாறி விழுந்துவிட்டீர்கள். மூன்றாவது படி எவ்வாறு ஏற முடியும்? வடநாடு முழுவதும் ஒரு மொழிக் கொள்கைதான்.

தமிழ்நாட்டில் இந்தியை யாரும் எதிர்க்கவில்லை; இந்தித் திணிப்பைதான் எதிர்க்கிறோம். கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழை கற்பிக்கவில்லை. மூன்றாவது மொழியை கற்பிக்கவில்லை. தமிழ்நாட்டில் 642 சி.பி.எஸ்.இ. பள்ளிகள் இருக்கிறது. அதில் ஆங்கிலம் பயிற்சி மொழி. இந்தி அல்லது தமிழ் என்று பழமொழிகளை கற்பிக்கிறார்கள். அந்தப் பிள்ளைகள் விருப்பப்படி படிக்கிறார்கள். அதில் கணிசமான பிள்ளைகள் இந்தி படிக்கிறார்கள். கணிசமான பிள்ளைகள் தமிழ் படிக்கிறார்கள். ஐ.சி.எஸ்.இ. பள்ளிகள் 77. ஐ.பி.எம் பள்ளிகள் 8. அனைத்தும் ஒரே மாதிரிதான். மூன்றாவது மொழியை யாரும் கற்பிக்கவில்லையே. சி.பி.எஸ்.இ., ஐ.சி.எஸ்.இ. ஐ.பி.எம். எல்லாம் தனியார் பள்ளிகள். அதில் எல்லாம் மூன்று மொழியை கற்பிக்கவில்லையே.

**மாணவ- மாணவியர்க்கு ஒரு மொழியில் அபார புலமை இருக்க வேண்டும்!**

நம்முடைய கவலையெல்லாம், நம்முடைய பிள்ளைகள், மாணவ மாணவிகள் ஒரு மொழியில் அபாரமான புலமை இருக்க வேண்டும்; இரண்டாவது மொழியில் எழுத, படிக்க தெரிந்திருக்க வேண்டும். இரண்டாவது மொழியை தாண்டாமல் மூன்றாவது மொழிக்கு எவ்வாறு செல்வது?

நீங்கள் கொஞ்சம் கொளத்தூரைத் தாண்டி கிராமத்திற்குச் செல்லுங்கள். கிராமத்தில் ஒரு பள்ளிக்கு செல்லுங்கள். நான் சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்தவன். நிறைய கிராமங்கள் இருக்கிறது. அந்தக் கிராமங்களில், உயர்நிலைப்பள்ளி இருக்கிறது; நடுநிலைப்பள்ளி இருக்கிறது; மேல்நிலைப்பள்ளி இருக்கிறது. அந்த பள்ளிகளில், நூலகம் திறக்கிறோம்; விழாக்களில் கலந்து கொள்கிறோம். பெரும் பகுதி பிள்ளைகளுக்கு ஆங்கிலத்தில் சரளமாக பேசவோ, எழுதவும் முடியாது. அது உங்களுக்கே தெரியும்.

சென்னையிலிருந்தவர்கள் எல்லாம், சென்னையிலா பிறந்தார்கள்? இங்கேயே அவதாரமா? அனைத்து ஊரிலிருந்து வந்தவர்கள்தானே. பொங்கலுக்கு செல்கிறீர்கள்; தீபாவளிக்கு செல்கிறீர்கள். சென்னையிலிருந்து நெடுஞ்சாலை முழுவதும் வண்டி சென்று கொண்டே இருக்கிறது. ஊருக்குச் செல்லும்போது கேளுங்கள். எந்த கிராமப் பள்ளியில் இரண்டாவது மொழியை சிறப்பாக பேச, எழுத பயிற்சி கிடைத்திருக்கிறது? அது நம்முடைய குறை. அந்தக் குறையை நாம் தீர்த்துக் கொள்ள வேண்டும். தமிழ் மட்டும் போதாது; ஆங்கிலமும் வேண்டும் என்று இரு மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்ட அரசுகள் தமிழ்நாடு அரசும் உட்பட. தமிழை மட்டும் செம்மையாக சொல்லிக் கொடுத்தால் போதாது; ஆங்கிலத்தையும் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும். பள்ளிக் கல்வித்துறையை வற்புறுத்த வேண்டும். அவர்கள் இன்னும் முயற்சி எடுக்க வேண்டும். இன்னும் பெரும் முயற்சி எடுத்து ஆங்கிலத்தில் சரளமாக பேச நம்முடைய பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். அதில் கருத்து வேறுபாடு இல்லை.

**தமிழ்நாட்டுக்கு மட்டும் மும்மொழிக் கொள்கை ஏன்?**

மூன்றாவது மொழி எங்கே வந்தது? இந்தியா முழுவதும் மும்மொழிக் கொள்கை இல்லை என்றால், தமிழ்நாட்டுக்கு மட்டும் ஏன்? அதுதான் கேள்வி. இதில்தான் முதலமைச்சருடைய திறனை முதலமைச்சருடைய ஆற்றலை முதலமைச்சருடைய முகத்தை நான் பார்க்கிறேன். இந்த மேடை யார் அமைத்தது? இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர். அவருக்குத் தெரியும் அவருடைய பாடல்; தமிழச்சிக்குத் தெரியும்.

முருகனைப் பற்றி பாடும்போது, 'ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே' என்று ஒரு பாடல் இருக்கிறது. 'ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே' ஒரு முகம், அவர் பதவியேற்ற அன்று அந்த முகத்தை நான் பார்த்தேன்.

'ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே
கூறும்அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே'

அந்த முகத்தை எல்லாம் இந்த நான்கு வருடங்களில் பார்த்துவிட்டோம். ஐந்தாவது வருடத்தில் பார்ப்பது, 'மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே' அந்த முகத்தை இன்றைக்கு பார்க்கிறேன். அடுத்த முகம் அடுத்த ஆண்டு வரும் என்று இந்தியா கூட்டணி நம்புகிறது, 'வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே'. வள்ளி என்பதன் பொருள் தேர்தல் வெற்றி. அது அடுத்த வருடம். இந்த வருடம் நம்முடைய நலனை எதிர்ப்பவர்கள் தமிழ்நாட்டை நலனை எதிர்ப்பவர்கள் நம்முடைய தனித்தன்மையை எதிர்ப்பவர்கள் நம்முடைய பிள்ளைகளின் எதிர்காலத்தை எதிர்ப்பவர்கள் நம்முடைய கல்வித் தனித்தன்மை, கல்வித் தகுதியை எல்லாம் எதிர்ப்பவர்கள் அவர்களை எதிர்த்து ஒரே முகத்தோடு தமிழ்நாடே நிற்க வேண்டும்; ஒரே முகத்தோடு தமிழ்நாடு எதிர்க்க வேண்டும்.

**மக்கள் கணக்கெடுப்பை நடத்தமாட்டார்கள்!**

இன்னொரு சோதனை வந்திருக்கிறது. தொகுதி மறுசீரமைப்பு. இதிலும் மிகுந்த கவனத்தோடு இருக்க வேண்டும். 1931ற்கு முன்பே மக்கள் கணக்கெடுப்பு நடந்தது. 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை கணக்கெடுப்பு நடந்தது. காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது, ஒவ்வொரு 10 ஆண்டும் கணக்கெடுப்பு நடத்தும். கடைசி கணக்கெடுப்பு 1991இல் எடுத்தோம். 2021ல் எடுத்திருக்க வேண்டும். 2021இல் நரேந்திர மோடி அவர்கள் பிரதம மந்திரி. ஆனால் கணக்கெடுப்பு நடத்தவில்லை. கேட்டால், அடுத்த வருடம்... அடுத்த வருடம்... கொரோனா வந்திருக்கிறது... அது வந்திருக்கிறது என்று சொன்னார்கள். சரி.

2021க்கு பிறகு, 22 ஆகி 23 ஆகி 24 ஆகி 25 வந்துவிட்டது. கணக்கெடுப்பு நடத்தவில்லை. இந்த வருடமும் எடுக்க மாட்டார்கள். எப்படி சொல்கிறேன் என்றால், கடந்த வருடம் சென்சஸ் கமிஷனருக்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கியது ஏறத்தாழ ஆயிரம் கோடி ரூபாய். அவர் ஆயிரம் கோடி ரூபாயில் இந்தியா முழுவதும் மக்கள் கணக்கெடுப்பை எடுக்க முடியாது. 142 கோடி மக்கள் இருக்கிறார்கள். 142 கோடி மக்களுக்கு கணக்கெடுப்பை ஆயிரம் கோடியில் நடத்த முடியாது என்று கடந்த வருடமே சொன்னார். இந்த வருடம் கணக்கெடுப்பு நடத்துகிறோம் என்று கடந்த வருடம் சொன்னார்கள்.

நான் பட்ஜெட்டை பார்க்கும்போது, இந்த வருடம் ஆயிரம் கோடிக்கு மேலாக அவர் கேட்ட பணத்தை கொடுப்பார்கள் என்று நினைத்தேன். ஆனால், இந்த வருடம் 500 கோடி ரூபாய் தந்திருக்கிறார்கள். அதிலிருந்தே தெரிகிறது கணக்கெடுப்பு நடத்த மாட்டார்கள். என்பதை அன்றைக்கு நாங்கள் ஆழமாக பார்க்கவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால், 2026இல் கணக்கெடுப்பு நடத்திய பிறகு, தொகுதி மறுசீரமைப்பு என்று அரசியல் சட்டம் சொல்கிறது. நாம் படித்தோமோ இல்லையோ, நரேந்திர மோடி படித்திருக்கிறார். 2026இல் கணக்கெடுப்பு நடத்த வேண்டும். இந்தக் கணக்கெடுப்பு நடந்த பிறகு, தொகுதி சீரமைப்பு செய்ய வேண்டும். அதுதான் அரசியல் சாசனத்தின் 81வது பிரிவு, 82வது பிரிவு.

**கணக்கெடுப்பை ஐந்து ஆண்டுகள் ஒத்திவைத்தார்கள்!**

இந்த இரண்டு பிரிவின்படி, 2026க்கு பிறகு நடத்தும் மக்கள் கணக்கெடுப்பு அடிப்படையில் தொகுதி சீரமைப்பு செய்ய வேண்டும். எனவே 2026க்கு முன்பு மக்கள் கணக்கெடுப்பை எடுத்திருந்தால், பிறகு 2036 வரைக்கும் காத்திருக்க வேண்டும். நான் சொல்வது புரிகிறதா? 2026க்கு முன்பு கணக்கெடுப்பு நடத்தி இருந்தால், 2026க்கு பிறகுதான் கணக்கெடுப்பு, பிறகுதான் தொகுதி சீரமைப்பு. 2026க்கு முன்பு கணக்கெடுப்பு நடத்தியிருந்தால், இன்னும் 10 வருடம் காத்திருக்க வேண்டும். 10 வருடம் தொகுதி சீரமைப்பு செய்ய முடியாது. எனவே, மத்திய அரசு கெட்டிக்காரத்தனம் என்று சொல்வேன். 2026க்கு பிறகு கணக்கெடுப்பு நடத்துவதற்காக, 5 ஆண்டுகள் கணக்கெடுப்பை

தொடர்ச்சி 14 -ஆம் பக்கம்

**இந்தித் திணிப்பு என்ற ஒரு சோதனை வந்திருக்கிறது. தொகுதி சீரமைப்பு என்ற சோதனை வந்திருக்கிறது. இந்த இரண்டு சோதனைகளையும் தனி மனிதர்கள் ஒவ்வொருவரும் தமிழனாக தலை நிமிர்ந்து நின்று இந்த சோதனையில் வெல்லுவோம் என்று இந்த நேரத்தில் உறுதி எடுத்துக்கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் இந்த முயற்சிக்கு தலைமை தாங்குவதை நான் வாழ்த்துகிறேன்.**